சுண்டுக்குளி கிளை நூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஐப்பசி 6 [illegible] 7 இதழ் 254
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 22-10-1985

## வாட விடலாமா?

விழிகள் பிதுங்க, வாய் பிளந்து, கையிலே தேங்காயுடன் ஏங்கித் திகைத்து நிற்கும் இக் குழந்தை ஓர் அகதிக் குழந்தை! வன்செயலால் சீர்குலைந்துவந்த அகதிகளுள் வாய்த்த இச்சிறு மழலையை நாம் வாட விடலாமா?



## 'அமிர்' பஹாமாஸ் சென்றாரா?

(லண்டன்)

தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பஹாமாஸ் தலைநகர் நாஸோவுக்கு விஜயம்செய்து முக்கிய ஆலோசனை நடத்தினாரா? லண்டன் வட்டாரங்களை ஆதாரம்காட்டி வெளியான ஏஜென்சி செய்தியே மேற்படி சந்தேகத்தை கிளப்பிவிட்டுள்ளது.

திரு. அமிர்தலிங்கம் கடந்தவாரம் சென்னையிலிருந்து லண்டன் புறப்பட்டுச்சென்றார். தமிழர் அகதிகள் நிலைகுறித்து அங்குள்ள தமிழ் அமைப்புகளுடனும் கட்சிகளுடனும் ஆலோசனை நடத்துவதற்காக அவர் லண்டன் சென்றதாக· (8ம் பக்கம் பார்க்க)

# இலங்கை திரும்பும் வழியில் ஜே. ஆர். புதுடில்லி விஜயம்

(நாஸோ)

இலங்கை இனப் பிரச்னை குறித்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் விரிவாக ஆலோசனை நடத்தும் பொருட்டு, இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அடுத்த சில தினங்களில் புதுடில்லி (7-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் 'பிரேமா' - ராஜீவ் நியுயோர்க்கில் இவ்வாரம் சந்திப்பு

(நியூயோர்க்)

ஐ. நா சபையின் நாற்பதாவது பொதுச் சபைக் கூட்டத்தில் இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இன்று உரை நிகழ்த்துவார்.

நியூயோர்க் வரும் வழியில் லண்டனில் இரு தினங்கள் தங்கியிருந்த பிரதமர் பிரேமதாசா நேற்றுமுன்தினம் நியூயோர்க் வந்து சேர்ந்தார்.

இதற்கிடையே பஹாமாஸ் சென்றிருந்த இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இன்று நியூயோர்க் வந்து சேர்ந்துள்ளார். ஐ. நா சபைக்கூட்டத்தில் நாளை பிரதமர் ராஜீவ் உரையாற்றுவார்.

இலங்கைப் பிரதமர் திரு. பிரேமதாசாவும் திரு. ராஜீவும் இவ்வாரத்தில் சந்தித்து இலங்கை இனப்பிரச்னை குறித்துப் பேச்சுக்கள் நடத்துவார்.

## வவுனியாவில் இரு கடைகள் தீக்கிரை!

(வவுனியா)

வவுனியா 'மில்' வீதியில் உள்ள இரு கடைகள் இனந் தெரியாதவர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தேநீர்க் கடை ஒன்றும் சைக்கிள் திருத்தும் கடையுமே தீக்கிரையாக்கப்பட்டுள்ளவை.

இச்சம்பவத்தின் அடுத்து குண்டுவெடிப்பு சத்தம் ஒன்றும் கேட்டதாக நகரமக்கள் தெரிவித்தனர்.

## வவுனியா நகரம் வழமைக்குத் திரும்புகிறது

[வவுனியா]

வவுனியா நகரம் வழமைக்குத் திரும்பிக்கொண்டுவரும் அதே நேரத்தில் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேறிய தமிழர்கள் இன்னமும் திரும்பவில்லை!

அரச அலுவலகங்களும், வங்கிகளும் இயங்கத்தொடங்கி விட்டன. அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் சரிவர இடம்பெறுவதாக அதிகாரி ஒருவர் கூறினார். மூடப்பட்ட செட்டிகுளம் உதவி அரச அதிபர் அலுவலகமும் மீண்டும் செயல்படத் தொடங்கிவிட்டது. சந்தை, அங்காடி வியாபாரிகளும் கூடத்தொடங்கி விட்டனர்.

அதே நேரத்தில் தினமும் நண்பகல் ஒரு மணியின் பின்னர் வவுனியா நகரம் வெறிச்சோடிக் கிடக்கிறது!

யாழ் - வவுனியா இ. போ. ச. சேவை திருப்திகரமாக நடக்கிறது. பிரயாணம் செல்வதில் கஷ்டம் எதுவுமில்லை என்று பிரயாணிகள் கூறுகின்றனர். ஆனால் உள்ளூர் பஸ்சேவை மிகவும் பாதிப்படைந்துள்ளது.

கிராமிய மக்கள் 'தட்டி வான்களிலும்' மினி வான்களிலும் தமது பயணத்தைத் தொடருகின்றனர். குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட பாலங்கள் இன்னமும் திருத்தப் படவில்லை.

## தனியார் மருத்துவக் கல்லூரி ஆங்கிலப்பயிற்சி வகுப்புகள் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

"வடபகுதி தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நாளை 23-ம் திகதி ஆரம்பமாகும். இப்பயிற்சி வகுப்புகள் 3 மாதம் நடைபெற்ற பின்னர் மருத்துவப் படிப்பிற் (7-ம் பக்கம் பார்க்க)

## சுரங்கப் பாதையில் வெடிப்பு

(கொத்மலை)

கொத்மலை நீர்த் தேக்கச் சுரங்கப் பாதையில் வெடிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நீர் மின் உற்பத்தி இங்கு நிறுத்தப் பட்டுள்ளது.

## யாழ்தேவி சோதனை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து நேற்று வந்த 'யாழ்தேவி'யில் பிரயாணம் செய்தவர்கள் மாங்குளத்தில் ஆயுதப்படையினரின் கடுமையான சோதனைக்குள்ளானார்கள்.

சந்தேகத்தின் மீது இருவர் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டனர்.

## சென்னையில் "தமிழீழக் கொடி"

(சென்னை)

சென்னையிலுள்ள கல்லூரிகளில் தமிழீழக்கொடியை ஏற்றுவதற்கு தமிழ்நாடு மாணவர் அமைப்பு முடிவெடுத்துள்ளது.

நேற்று சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழீழக் கொடி இந்த மாணவர் அமைப்பினால் ஏற்றி வைக்கப்பட்டது. (ப)

## "ஆயுதப்படை சுற்றிவளைக்க ஊர்காவல்படை சூறையாடல்"

### கணவனை இழந்து 18 நாட்கள் காட்டிலிருந்த பெண் தகவல்

(யாழ்ப்பாணம்)

"ஆயுதப் படையினர் வளவைச் சுற்றிக் காவல்செய்து நிற்க, வீட்டினுள் புகுந்த ஊர்காவல் படையினர் பன்குளம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் தம்பையா நிற்சிங்கத்தை (58 வயது) சுட்டுக் கொன்று அந்த வீட்டிலிருந்த எட்டு லட்சம் ரூபா பெறுமதியான நகை, பணம், தளபாடங்கள் மற்றும் நாலு மாட்டு வண்டிகள், ஆடு, மாடு, கோழி, அரிசி ஆலைக்குரிய யந்திர உபகரணங்கள் உட்பட அனைத்தையும் சூறையாடிச் சென்றனர். இச்சம்பவம் திருகோணமலை பன்குளம் 5ம் வாய்க்காலில் நடைபெற்றுள்ளது".

சங்கானையில் தற்போது தங்கியிருக்கும் திருமதி நிற்சிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்தமாதம் 18ம் திகதிபகல் இச்சம்பவம் நடந்தது.

தமது கணவரைச் சுட்டதும் தான் பயந்தோடி வேறொரு வீட்டில் அடைக்கலம் புகுந்ததாகவும், அங்குவந்த ஊர்காவற்படையினர் தம்மை அடித்துத் துரத்தியதாகவும், அதனால் தான் நிலாவெளிக் காட்டில் 18 நாட்கள் ஒழிந்திருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததாகவும் அவர் கூறினார்.

திரு. நிற்சிங்கம் பன்குளத்தில் பெரும் விவசாயியாகவும், தொழில் நடத்துநராகவும், ஆடு, மாடு, கோழிப் பண்ணைகளை வைத்திருந்தவர் என்றும், இவற்றில் பெரும்பாலும் சிங்களவர்களே வேலைசெய்து வந்தனரென்றும் அவர் தெரிவித்தார்.

இறந்த தனது கணவரின் சடலத்துக்கு என்ன ஆனது என்பதுபற்றித் தமக்குத் தெரியாது என்று கவலை தெரிவித்த திருமதி நிற்சிங்கம், வீட்டின் நிலைக்கதவுகள்கூட உடைத்து எடுக்கப்பட்டனவென்றும் கூறினார். (ஐ)

## அகதி முகாம்களுக்கு விஜயம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த 'குழந்தைகளைக் காப்பாற்றுங்கள்' எனும் பிரிட்டிஷ் நிதியத்தின் நிர்வாகிகள் திரு. ரொபேர்ட் பார்ஸன்சும், திருமதி கிளிபர்ட் காவ்ட்டும் யாழ்ப்பாணத்தில் உள்ள அகதி முகாம்களை பார்வையிட்டனர்.

ஒருவாரகாலம் இங்கு நின்று அகதிகளைச்சந்தித்து அவர்களின் தேவைகளைத் தெரிந்து உதவி செய்யப் போவதாக இவர்கள் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

# விளம்பரம்

## விற்பனைக்கு

முரகமொட்டையில் மூன்று ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு: திருமதி பொன்னுசாமி (ஆசிரியை), வீரமாகாளி வீதி. நல்லூர் வடக்கு, நல்லூர். 1362

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, இந்துமகளிர் கல்லூரிகளுக்கு மிக அண்மையில் சகல வசதிகளும் கொண்ட 1½ பரப்பு வீடும் வளவும் நல்ல தண்ணீர் கிணற்றுடன் உடன் விற்பனைக்கு நல்லூர் புதிய செம்மணித் தெருவில் 15 பரப்பு வீட்டு நிலம், யாழ் மாநகர எல்லையில் 40 பரப்பு நெற்காணி தொடர்பு கொள்ளவும்: Taxman, கன்னாதிட்டிச் சந்தி. யாழ்ப்பாணம். Phone: 22444. [1365]

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம் அரசடி வீதியில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. கந்தசாமி, அரசடி வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. 1339

## தவறிவிட்டது

வல்லிபுரம் தர்மலிங்கம், குமுளமுனை, கரணவாய் வடக்கு, கரவெட்டி என்பவருடைய அடையாள அட்டை யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோவிலடியில் தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும்: தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1856

திருமதி பொன்னம்மா மயில்வாகனம், மீசாலை என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 262, கே கே எஸ். வீதி, சிவன்கோவிலடி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1359

இல: 631672930V அம்பலவி பூபாலசிங்கம், 4ம் வட்டாரம், புங்குடுதீவு என்பவருடைய அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். 1368

## தேவை

திருத்தி அமைக்க முடியாத T. V, ரியூப் உடைந்த T. V. கள், விடியோ டெக் உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்: 184 A. நாவலர்ரோட், யாழ்ப்பாணம். 1352

### வகுப்புகள்

A/L 86, 87. கலை, வர்த்தக விஞ்ஞானம், தட்டச்சு, சுருக்கெழுத்து, Spoken English, Book Keeping; ஆரம்பம்- 23-10-85 பிறிலியன் அக்கடமி (1) நெல்லியடியில் QC. மகாத்மா வீதி; (2) பிரதான வீதி, பருத்தித்துறை. 1294

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

கென்ஸ்மன் லேன், சாவகச்சேரி வாசி காலம் சென்ற டேவிட் துரைரத்தினம் வாட்ஸ்வத் பெண் (சந்தையா மகள்) தேவநேசம் வாட்ஸ்வத் என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தும் உடமைப் பொருட்களின் விடயத்தில்

மரணமெய்தியவர்.
டேவிட் துரைரத்தினம் வாட்ஸ்வத். கென்ஸ்மன் லேன், சாவகச்சேரி
மனுதாரர்.

இல: 330, தத்துவம்

எதிராக
எபநேசர் நேசராஜ் வாட்ஸ்வத், கென்ஸ்மன் லேன், சாவகச்சேரி,
எதிர்வாதி

மேற்படி வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது;

அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அப் பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ம் திகதி.
நீதிமன்றக்கட்டளைப்படி,

ஆ. குணநாயகம்
(ஒப்பம்)
பதிவாளர்

தயாரித்தவர்:
சு.கந்தசாமி (ஜே.பி யு எம்)
மனுதாரரின் சட்டத்தரணி.
(1092)

### முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

செல்வன் இரஞ்சிடன்



பருத்தித்துறை புலோலி கிழக்கு இரஞ்சிதவாசாலை சேர்ந்த சண்முகநாதன் ரஞ்சிதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் ரஞ்சிடன் இன்று 22-10-85 தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடிக்கொண்டு இருக்கிறார். இவரை,

அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா, அப்பம்மாமார் வாழ்த்துகிறார்கள் அன்றிமார் சுகிலா, பரமினி, சுவம் கமலா, அண்ணாமார் குகன், கேதீஸ்வரன், குமரன்; இராமதாஸ் மாமா, விஜயதாஸ் மாமா: ரஞ்சாமி இவரை வாழ்த்துகிறார்கள். பெரியப்பாமார் இலிங்கநாதன், இராமநாதன், பெரியம்மாமார், மாமிமார் மகாலட்சுமி, விஜயலட்சுமி ராமச்சந்திரன், பச்சாவிமார் ராதா மணி சாரதி, ரோகினி, செந்தில், நிசந்தன், வண்டன் மாமா. பிரான்ஸ் மாமா, சவுதி சித்தப்பா, அவுஸ்திரேலியா அன்றி ஜெர்மனி மாமா, மாமி, மற்றும் உற்றார், உறவினர், சினேகிதர்கள் சகலரும் பெற்றுபல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள். 1150

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு / 5889 இலக்க வழக்கில் வாதி தெல்லிப்பழை மேற்கு வயிரவி கதிரவேலுவுக்கு விற்பனவு திகதிவரை போகவேண்டிய தீர்வைத் தொகை 10 697/- ரூபாவும் மேலும் இதில் 5,500/- ரூபாவுக்கு 31 - 8 - 84 தொடக்கம் 3 - 1 - 85 வரை வருடமொன்றுக்கு 54% வீத வட்டியும், அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 4375 - 10 சதமும் விற்பனவுச் சிலவுகளும், இத்தொகையைப் பிரதிவாதியாகிய கீரிமலை கூவில் வெள்ளையன் வயிரவனிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1985 ஆம் நவம்பர் மீ 14 உ (14 - 11 - 1985) முற்பகல் பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்;

### குறித்த ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கிறை 'கூவில்' நிலப்பரப்பு ஒன்று இதற்கு எல்லை கிழக்கு - ரோட்டு வடக்கு கந்தர் கதிரவேலுவுக்கும் பெண் தெய்வக்குமுரிய ஆதனம் மேற்கு இலங்கையர் கணேசலிங்கனம் தெற்கு நாகர் கந்தனிருதனம் இதுடன்களும்:
H 611/228

வி. செ. குட்டிப்பிள்ளை
விற்பனை ஆணையாளர்.

643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 1355

## வெற்றிடங்கள்

### பயிலுனர்

எமது தொழிற்சாலையில் பயிலுனருக்கான வெற்றிடங்கள் உள்ளன விண்ணப்பிப்பவர்கள் G. C. E. (O/L) பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் இருத்தல்வேண்டும். எழுத்துமூலமான விண்ணப்பத்துடன் வேலை நேரங்களில் நேரில் வரவும்.

**எவர்சில்வர் இன்டஸ்றீஸ்,**
கைத்தொழிற் பேட்டை, அச்சுவேலி.

## லேத்மன் (Latheman) தேவை

திருநெல்வேலியில் அமைந்திருக்கும் பாரிய தொழிற்சாலைக்கு நல்ல அனுபவமுள்ள லேத்மன் தேவை. அத்தாட்சிப் பத்திரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 118,
மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (118)

## வெளிநாட்டு பிரயாணம்

பாரெய்னிக் மேசன், தச்சர், ரிக்கர், பார்பென்டெர் வெல்டர் தொழிலாளர், போன்ற தொழில்களும், கரட்டாரில் தொழிலாளர். கிளீனேர்ஸ் போன்ற தொழில்களும் பெற்றுச் செல்லும் கடன் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

**ஷாயி ஷீபாஸ் ஏஜென்ஸீஸ்**
125, கடற்கரை வீதி. குருநகர்,
யாழ்ப்பாணம்.
(பழைய பொலிஸ் நிலையம் அருகாமை) (1369)

ஓம் சக்தி
ஸ்ரீ வாராஹி துணை

கொக்குவில்-கொக்குவில் மேற்கு

அருள்மிகு
ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலயம்

## கேதார கௌரி விரத 21 தின இலட்சார்ச்சனை விழா

ஆரம்பம்: 23-10-85 மாலை 3-00 மணி
பூர்த்தி: 12-11-85 இரவு 7-00 மணி

கௌரி காப்பு நூல் விபரம்

தனி நூல் காப்பு — 15 ரூபா
நைவேத்தியத்துடன்
பெட்டிக்காப்பு — 50 ரூபா

தொடர்புகள்;
ஆலய பிரதமகுரு
க. குகதாஸக் குருக்கள்.
உயரப்புலம், ஆனைக்கோட்டை, ஸ்ரீலங்கா.
(1364)

## முதலாண்டு நினைவஞ்சலி

அமரர் தம்பாபிள்ளை சிவசுப்பிரமணியம்
(காங்கேசன்துறை T. S. K V Bros உரிமையாளர்)

மலர்வு:
30-05-1925

உதிர்வு:
01-11-1984



எங்கள் இல்லத்தில் அணையாத தீபமாக ஒளிவிடும் எங்கள் அன்புத் தெய்வமே அருந்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட பாசப்பிணைப்பே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி. அருமைப்பிள்ளைகள்.
மருமகன், பேரப்பிள்ளைகள். உறவினர்கள்,
அன்னாரது ஒரு வருட திதி 22 10-85 அவரது இல்லத்தில் நடைபெறும்.
வேலணை மேற்கு, வேலணை: (1358)

# அவகாசமளித்து பொருளாதாரத்தடை:

## தென்னாபிரிக்காமீது பிரிட்டன் நடவடிக்கை

(நாஸோ)

இனஒதுக்கலை நீக்குவதற்கு தென்னாபிரிக்க அரசுக்கு குறிப்பிட்டகாலம் அவகாசம் கொடுத்து அந்தக்காலத்துக்குள் தென்னாபிரிக்கா இன ஒதுக்கலை நீக்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காதபட்சத்தில் அந்த நாட்டின் மீது கட்டாய பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்கு பிரிட்டன் இணங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

தற்போது பஹாமாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொதுநலவமைப்பு நாடுகளின் மாநாட்டில் இந்தியா உட்பட பல நாடுகள் தென்னாபிரிக்கா மீது கட்டாயத் தடையை கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கைக்கு பிரிட்டன் மறுப்புத் தெரிவித்தவேளை தென்னாபிரிக்க அரசுக்கு அவகாசம் கொடுத்து அதன்பின்னர் பொருளாதாரத்தடைகளை விதிக்கலாம் என்பதனை ஏற்றுக்கொண்டுள்ளது. பிரிட்டன் மேற்படி கோரிக்கைக்கு இணங்கியதன் காரணமாக பஹாமாஸ் மாநாட்டில் இந்த முடிவு எல்லா நாடுகளினாலும் ஏற்றுக்கொள்ளப்படலாம் என நம்பப்படுகிறது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி உட்பட பல ஆபிரிக்கத் தலைவர்கள் இம் மாநாட்டில் தென்னாபிரிக்கா வின் இனவெறியை வன்மையாக கண்டித்துள்ளதோடு அதற்கு ஆதரவு அளித்து வரும் பிரிட்டனையும் மறைமுகமாக கண்டித்தனர். ஆயினும் தென்னாபிரிக்கா மீது கட்டாயத்தடைகளை விதிப்பது அந்த நாட்டு கறுப்பின மக்களையே அதிகமாக பாதிக்கும் என்று பிரிட்டன் காரணம் கூறி படிப்படியான பொருளாதாரத் தடை விதிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

## இந்திய ஜனாதிபதி கர்னாடகம் விஜயம்

(பெங்களூர்)

கர்னாடக மாநிலத்தில் 4 நாள் பயணமாக இந்திய ஜனாதிபதி திரு. ஜானிஸெயில் சிங் நேற்று பெங்களூர் வந்து சேர்ந்தார்.

இந்திய ஜனாதிபதி இலட்சத்தீவுகளில் தமது பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று பெங்களூர் வந்துசேர்ந்தார்.

## ...களுக்கு ...உதவி

(யாழ்ப்பாணம்)

உயர்நிலை மாணவர் ஒன்றியம், வவுனியாவில் தங்கியுள்ள அகதிகளுக்காக நேற்று முன்தினம் பத்தாயிரம் ரூபா ரொக்கப்பணத்தை அனுப்பி வைத்துள்ளது.

## வெங்காய விலை அதிகரிப்பு

(ஒட்டுசுட்டான்)

வவுனியாவுக்கு தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் கடந்த பல நாட்களாகப் படையெடுப்பதால், சின்ன வெங்காயத்தின் விலை முன்னர் இருந்ததைவிட சற்று அதிகரித்துள்ளது. (மா)

## தென்னாபிரிக்காவில் தொடரும் வன்முறை

(கேப்டவுன்)

தென்னாபிரிக்க கவிஞர் தூக்கிலிடப்பட்டமையைத் தொடர்ந்து அங்கு ஆரம்பித்த வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன.

கேப் மாகாணப் பகுதியிலேயே இந்தக் கலவரங்கள் தொடர்ந்து வருவதாகவும் கறுப்பின மக்கள் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இதன் எதிரொலியாக கேப் மாகாணத்தில் 61 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பெஷாவரில் நேற்றுமுன்தினம் குண்டு ஒன்று வெடித்ததில் 12 பேர் படுகாயமடைந்தனர்.

லொறி ஒன்றுக்கு கீழே வைக்கப்பட்டிருந்த இந்த குண்டு வெடித்ததில் இவர்கள் காயமடைந்ததோடு பல கட்டடங்களும் சேதமடைந்துள்ளது என்று கூறப்படுகிறது.

## தெங்கு ப. பொ. கூட்டுறவு சங்கத்தை சீர்குலைக்க தனியார் முயற்சி!

### அரியாலை தலைவர் கண்டனம்

(அரியாலை)

"தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம், ஒரு சமூக ஸ்தாபனமாகும். இது சீவல் தொழிலாளர் சமூகத்துக்கு கிடைத்த ஒரு கலங்கரை விளக்கு இந்த சமூக அமைப்புக்கு எதிராக தனியார் சிலர் சட்டவிரோதமாக மரம் சீவுவதிலும் கள்விற்பதிலும் ஈடுபட்டு சங்கத்தை சீர்குலைக்க முற்படுகின்றார்கள். இது பட்டவர்த்தனமான சமூக விரோதச் செயலாகும். இதனை உடனடியாக "இந்த" தனிநபர்கள் நிறுத்திக்கொள்ளவேண்டும். நாம் பலமுறை, பல்வேறுவழிகளில் நயமாகவும் பயமாகவும் தெரிவித்துவந்தும் தொடர்ந்தும் இவர்களில் சிலர் எமது வேண்டுகோளைப் புறக்கணித்து வருகிறார்கள். சங்கம் இனிமேல் தயவு தாட்சணியமற்றமுறையில் குறிப்பிட்டவர்கள் மீது நேரடி நடவடிக்கைகளில் இறங்கும்"

இவ்வாறு அரியாலை தெ. ப. பொ. கூ. சங்கத் தலைவர் திரு. த. இலங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத மின்பாவனை: உடுவில் ஒளி இழந்தது

(உடுவில்)

சட்டவிரோதமாக மின் பாவனை அதிக அளவில் நடைபெற்று வந்ததன் விளைவாக உடுவில் சந்தரோடை கிராம மக்கள் முற்றாக மின்சார வசதியை இழந்துள்ளனர்.

சந்தரோடை கிராமத்தின் ஒரு பகுதிக்கும் உடுவில் கிராமத்தின் ஒரு பகுதிக்கும் மின்சாரத்தை வழங்கி வந்த சுந்தரோடையில் இயங்கிவந்த உப மின்நிலைய மின் உபகரணங்கள் திடீரென செயலற்று எரிந்துள்ளன.

கன்னாகம் அபிவிருத்திச் சபை உபநிலைய மின் அத்தியட்சகர் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஆகியோரினால் அடிக்கடி வெளியிடப்பட்ட சட்டவிரோத மின்சாரத் தடையுத்தரவுகள் உதாசீனம் செய்துவிட்டு சட்டவிரோதமாக மின் பாவனையைப் பெற்றதன் பயனை உடுவில் கிராம மக்கள்தான் அனுபவிக்க வேண்டும் என்று மின்சாரசபை ஊழியர் ஒருவர் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில் தெரிவித்தார்.

# பரிசு பெறும் குழந்தைக் கவிஞர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துமகளிர் கல்லூரியில் உயர் வகுப்பிற் கற்கும் மாணவிகளிடையே நல்லூர் கல்விவள நிலையம் நடத்திய குழந்தைக் கவிதைப் போட்டியில் பின்வரும் மாணவிகள் பரிசு பெறுகின்றனர்.

முதலாம் பரிசு: செல்வி ச. சரோஜினி, இரண்டாம் பரிசு செல்வி ச. சரோஜினி மூன்றாம் பரிசு செல்வி சி யமுனாராணி செல்வி கி ஜீவமணி நான்காம் பரிசு செல்வி கி. யமுனாராணி ஐந்தாம் பரிசு செல்வி சி ஜீவமணி

பத்தொன்பது கவிஞர்கள் கலந்துகொண்ட இப்போட்டிக்கு 102, கவிதைகள் எழுதப்பட்டன, இவற்றுள் மூன்று கவிஞர்கள் முதல் ஐந்து பரிசுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கவிதைகளில் இருபத்தொன்றின் தொகுப்பாக "பாலர் பா அமுதம்" என்ற நூல் நேற்று திங்கட்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வெளியிடப்பட்டது.

## கேதாரகௌரி விரதம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு ஸ்ரீவாராஹி அம்பாள் தேவஸ்தான கேதாரகௌரி விரதம் இம்மாதம் 23-ம் திகதி முதல் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தியொரு நாட்கள் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

## மறவன்புலோவில் ஆரம்ப சுகாதார வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

"மக்கள் சுகமாக வாழ்வதற்கு நோய்வருமுன் காப்பது அவசியமாகும். நோய் வந்தபின் என்ன செய்ய வேண்டும் என்பதும் மக்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இந்த புதிய வைத்திய நிலையத்தின் மூலம் உடனடியான அவசிய சிகிச்சைகளைச் செய்து கொள்ளலாம், சாவகச்சேரிப் பகுதியில் திறக்கப்பட வேண்டிய 14 நிலையங்களில் முதன் முதலாகத் திறக்கப்பட்ட நிலையம் இதுவேயாகும். இந்நிலையத்திற்காக உருவாக்கப்பட்ட சுகாதார பாதுகாப்புக் குழு நன்முறையில் இயங்கி இந்நிலையத்தை திறந்து நடத்தவுள்ளது." இவ்வாறு மறவன்புலோவில் அண்மையில் நிலந்து வைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார வைத்திய சாலையின் திறப்பு விழாவின்போது தலைமை வகித்துப் பேசிய சுகாதார வைத்திய அதிகாரி திரு. குணரத்தினம் தெரிவித்தார்.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையின் டாக்டர் கு. செந்தில்நாதன் வைத்தியசாலைக் கட்டிடத்தை திறந்து வைத்து ஆரம்ப சேவை செய்தார்.

இத்திறப்பு விழாவில் பலர் சிறப்புரையாற்றினர். வைத்தியக்குழு செயலாளர் திருமதி த. பீற்றர் நன்றியுரை கூறினார். சுகாதார பாதுகாப்புக் குழுத்தலைவர் திரு. க. மனோகரன் வைத்தியசாலைக் கட்டிட வேலைகளைச் செய்து கொடுத்தார்.

## கிளிநொச்சியில் முகமூடி மனிதர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் இராணுவ முகாம் முன்பாக திடீரென முகமூடி அணிந்த ஒருவரை நிறுத்திய ஆயுதப்படையினர் பொதுமக்களை மிகக் கடுமையாகச் சோதனையிட்டனர்.

இச்சோதனையின்போது சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## பயிர்களுக்கான உரம் கொள்ளை

(பண்டத்தரிப்பு)

தொல்புரம் கமநலச் சேவை நிலைய களஞ்சிய அறையில் இப் பகுதி விவசாயிகளுக்கு சகாய விலையில் விநியோகிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த 25 அந்தர் உரம் இரவு வேளையில் இனம் தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ஐயாயிரம் ரூபா பெறுமதியான இந்த இந்த உரம் இப் பகுதி விவசாயிகளுக்கு வழங்குவதற்காக தேசிய உரக் கூட்டுத்தாபனத்தினால் கடன் அடிப்படையில் தொல்புரம் கம நலச்சேவை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததாகவும், இந்த உரம் கொள்ளையடிக்கப்பட்டதினால் கட்டுப்பாட்டு விலையில் நிலையத்தின் மூலம் விவசாயிகளுக்கு உரம் வழங்குவது தடைப்பட்டுள்ளது, என்றும் தொல்புரம் கம நலச்சேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தர் திரு பி குலசப்பிள்ளை தெரிவித்தார்.

## அகதிகளுக்கு உடுப்புகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், மூந்நூறு உடுப்புப் பார்சல்களை இடம்பெயர்ந்து வந்து யாழ்ப்பாணப் பகுதிகளில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு வழங்கியது.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து இந்தப்பார்சல்கள் வழங்கப்பட்டன.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சிவகுருநாதன், அகதிகள் புனர்வாழ்வு கழகத்தலைவர் திரு. எஸ். சிவலிங்கம் உட்படப் பலர் இப்பார்சல்களை வழங்குவதில் ஈடுபட்டனர்.

ஒவ்வோர் பார்சலிலும் சேலை, சாரம், படுக்கை விரிப்பு துவாய் என்பன அடங்கியிருந்தன: திருகோணமலை, வவுனியா போன்ற இடங்களிலிருந்து வந்த அகதிகளுக்கே இவை வழங்கப்பட்டன.

உடுப்பு பார்சலை வழங்கிய அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் மேலும் பல உதவிகளை அகதிகளுக்குச் செய்யத் திட்டமிட்டுள்ளதாக இதன் தலைவர் தெரிவித்தார். (ஐ)

## விபரக்கொத்து வெளியிடப்படும்

(கொழும்பு)

போர் நிறுத்த மீறல் தொடர்பான புகார்களை மக்கள் எவ்விதம் சமர்பிக்க வேண்டும் என்ற விளக்கத்தை தெரிவிக்கும் 'விபரக்கொத்து' ஒன்றை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவெளியிடவுள்ளது. (ய)

## பொய்க்கால் குதிரை ஆட்டம்

[பண்டத்தரிப்பு]

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கலாசாரப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொய்க்கால் குதிரை ஆட்டம் சுழிபுரம் காளுவன் சந்தியில் நடைபெற்றபோது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அதனைபார்வையிட்டனர்.

சங்கானையிலும் அதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை மாவடியிலும், பிற்பகல் பொன்னாலையிலும் இந்த பொய்க்கால் குதிரை ஆட்டம் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

...க்கு

மனிதன் ... ஆகப் பிறக்கிறான்; ஆனால் எங்கு நோக்... அவன் அடிமைத்தனங்களில் பிணைக்கப்பட்டே காட்சியளிக்கிறான்;

— ரூசோ

# நமது நோக்கு

## இனவெறியின் முன்னே உலக அபிப்பிராயம் ஒரு தூசு!

இனவெறியும் பாசிஸப் போக்கும்கொண்ட ஆட்சியாளர்கள் - அவர்கள் வெள்ளையராய் இருந்தாலென்ன கறுப்பராய் இருந்தாலென்ன இரண்டும் கெட்டான் நிறமாகத் தான் இருந்தாலென்ன - ஒரு போதும் உலக அபிப்பிராயத்துக்கு மதிப்பளிக்கமாட்டார்கள்.

இதனை அச்சொட்டாக நிரூபித்து வருகின்றது தென்னாபிரிக்க வெள்ளையரின் நிறவெறி அரசு.

பஹாமாஸில் கூடியுள்ள அணிசேரா நாடுகள் மிக மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டும்கூட அந்த மாநாடு முடிவடையும் வரைக்குமாவது காத்திராமல் கறுப்புநிற விடுதலைக் கவிஞனான பெஞ்சமின் மலோஸிக்கு மரணதண்டனை நிறைவேற்றி மகிழ்ந்திருக்கிறது அந்த நாட்டின் அரசு.

உலக அபிப்பிராயம் அவர்களுக்கு சரியான முறையில் பாடம் புகட்டும் மட்டும் இந்த நிலை நீடிக்கவே செய்யும் என்பது தெளிவு.

தங்கம், வைடூரியம், பிளாட்டினம், யுரேனியம், நிலக்கரி, எஃகு, எஸ்பஸ்டோஸ், மங்கனீஸ்போன்ற இயற்கை கனிவளங்கள் அபரிமிதமாகக் கிடைக்கும் இந்த நாட்டில் மனித உழைப்புக்கும் குறைவில்லை. ஆனால் எங்கிருந்தோ வந்த விரல்விட்டு எண்ணக்கூடிய வெள்ளையர்கள் இந்த வளங்களையெல்லாம் சுரண்டிக் கொண்டு அங்குள்ள கறுப்பு இனத்தவர்களை அடக்கி ஒடுக்கி 'காட்டுமிராண்டி'த்தனமான தர்பார் நடத்துகிறார்கள்.

இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து அந்த நாட்டின் சொந்தக்காரர்களின் சட்டபூர்வமான உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க அணிசேரா நிறுவனமும், ஐ நா சபையும் பகீரதப் பிரயத்தனம் செய்துவருகின்றன என்னதான் உலக அபிப்பிராயத்தை இந்த நிறுவனங்கள் தென்னாபிரிக்காவுக்கு எதிராக உருவாக்கியபோதிலும் அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும் சுயநலம் காரணமாக அந்த அரசுக்கு முண்டு கொடுத்து வருவதால் அது அசைந்து கொடுக்காமல் இருந்துவருகின்றது.

என்றாலும் இன்று உருவாகியுள்ள நிலைமையைப் பார்க்கையில் அந்நாட்டில் விடுதலை வீரர்கள் செய்துள்ள தியாகங்களுக்கு விரைவாகவே பலன் கிடைக்கும் அறிகுறிகள் தென்படுகின்றன.

தென்னாபிரிக்காவுக்கு காலக்கெடுவுடன் அவகாசம் வழங்குவதென்றும், அதற்குள் தனது போக்கை அது மாற்றிக்கொள்ளாத பட்சத்தில் கடுமையான பொருளாதாரத்தடைகளை விதிக்க பிரிட்டனும் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் பஹாமாஸ் செய்திகள் கூறுகின்றன. ஏனைய ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் இதே நிலையைக் கடைப்பிடித்தால் தென்னாபிரிக்கா உலக அபிப்பிராயத்தின் முன் மண்டியிட்டே ஆக வேண்டும்.

அந்தநிலை வெகுவிரைவாகவே ஏற்படும் என்று எதிர்பார்ப்போம்.

# அகில இந்து கலாசார நிலையம் அமைக்கப்படும்

(கொழும்பு)

"அகில இந்து கலாசார நிலையம் ஒன்று விரைவில் இலங்கையில் அமைக்கப்படும்.

பம்பலப்பிட்டியில் இந்து கலாசார திணைக்களத்தின் புதிய அலுவலகத்தை திறந்து வைத்துப் பேசிய, பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நாட்டில் இந்து ஆலயங்கள் இல்லாத கிராமங்களில், இந்து ஆலயங்கள் அமைக்க ஒரு நிதியம் ஆரம்பிக்கப்படுமென்றும், இந்து கலைக்களஞ்சியம் ஒன்று உருவாக்கப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ப)

## ஐப்பசியை சைவ மலர்ச்சி மாதமாக பின்பற்றுக!

சைவசமயம் நீண்டகால பாரம்பரிய வளர்ச்சியுற்ற வந்தது. இதன் மலர்ச்சிகள் மக்களின் நல்வாழ்வுக்கு வழியமைக்கும் வழிவகைகளை உடையதாகும். இந்துவெளி நாகரிகத்துடன் ஆரம்பித்த இயற்கை வழிபாட்டுமுறைகள் பல இயல்பான அனுபவங்களின் அடிப்படையிலானதாகும்.

சைவ சமயத்தின் முழுமுதற் தெய்வமான சிவபெருமான் மனிதகுல நல்வாழ்வுக்கும் அமைதிக்கும் ஏற்ற பல வடிவங்களில் அருள் சுரக்கின்றார். கண்கண்ட தெய்வங்களான தாய் தந்தையரை இறைவன் தன் வடிவில் இணைத்து தன்பிள்ளைகளை வழிப்படுத்து பாங்கில் விநாயகர், சுப்பிரமணியர், வயிரவர், ஐயனார், துர்க்கை, மகாலெட்சுமி, சரஸ்வதி போன்ற பல காட்சிகளை உருவாக்கியுள்ளனர். இவற்றை வடிவமைத்து பலன்கூறும் பாங்கிலான விளக்கங்கள் பல சித்தர்களுக்குரியதாகும்.

நீதிபதியாக விளங்கிய கடையிற் சுவாமிகள் உயிர்களின் மீது கொண்ட பற்று உறுதியால் மரணதண்டனை வழங்க வேண்டிய குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கவேண்டிய நிலையில் தன் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். அவர் நாடு வந்த பூமியில் ஓர் சித்தர் பரம்பரையைத் தோற்றுவித்து இன்று சுப்பிரமணிய முனிசாமி வரை தொடர்ந்து செல்கின்றது. இதற்குரிய காரணம் யாது என்பதை ஒவ்வொரு சைவனும் தன்னை உணர்ந்து

**வே. கெ. தனபாலன்**

தன் வழிகாட்டியை உணர்ந்து செயற்பட்டால் அவனை நாடும் துன்பங்கள் சூரியனைக்கண்ட பனி போல் மறைந்துவிடும்.

இந்த ஐப்பசியில் ஒவ்வொரு சைவனும சமயதீட்சை பெற்றுக்கொள்ளுதல்வேண்டும். சைவ நற்சிந்தனைகளைத் தினமும் பெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை குறித்த நேரத்திற்கு ஒழுங்குசெய்து பங்கு பற்றுதல் வேண்டும். தினமும் பங்குகொள்ள முடியாதவர்கள் வாரத்தில் ஒருமுறை முக்கியமாக வெள்ளிக்கிழமைதோறும் ஆலய வழிபாட்டிற்கு நேரம் குறித்து ஒவ்வொரு ஆலயங்களிலும் சைவ நற்சிந்தனைகள், கட்டுப்பாடுகள், வாழ்க்கையின் வழிகாட்டுதல்களை மேற்கொள்ளுவதற்கு கற்றுக்கொள்ளுதல் வேண்டும். இதற்கு உறுதுணையாக நாயன்மார் காட்டிய வழியில் கூட்டுப்பிரார்த்தனைகள் எல்லா சைவ ஆலயங்களிலும் இடம்பெறுதல் அவசியமாகும். இதற்கு ஆலய பரிபாலகர்களும், தர்மகர்த்தாக்களும் இயன்ற ஒழுங்குகளைச் செய்து சைவ மத மலர்ச்சிக்கும் அதன் வழிபாட்டுமகிமைகளையும் மக்கள் பெற வழியமைத்தல் இம்மாதத்தின் சிறப்பாக அமையும்.

இம்மாதத்தின்சிறந்த நோன்பாக வரும் கந்தஷஷ்டி விரதத்தின் மகிமையையும் அதன் பலன்களையும் ஒவ்வொரு சைவனும் பின்பற்றமுனையின் அவனைப் பிடித்த பீடைகளும் துன்பங்கள் சூரியனைக்கண்ட பனிபோல் மறைந்து நாவலரின் நல்வழியில் சைவமும் தமிழும் வளர உதவும்.

## திருப்பி ஒப்படையுங்கள்

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் கடந்த 17ஆம் திகதி நள்ளிரவில் ரொக்கமும். வெங்கடேசப் பெருமானின் மிகப் பழமை வாய்ந்த திருவாபரணங்களும், விலை மதிக்கமுடியாத வலம்புரிச் சங்கும் ஆயுதந் தாங்கிய கோஷ்டியினால் கொள்ளையிடப் பட்டது. இனந்தெரியாத இம் முகமூடிக் கொள்ளையர் ஆயுத முனையில் இரு அறங்காவலர்களை அழைத்துச் சென்று அவர்களைக் கொண்டே கோவிலையும் களஞ்சியத்திலிருந்த இரும்புப் பெட்டியையும் திறந்து அதனுள்ளிருந்த திருவாபரணங்களையும் ரொக்கப் பணத்தையும் வலம்புரிச் சங்கையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

# மக்கள் கருத்து

இச்செயல் தமிழ் மக்களின் பாரம்பரியத்திற்கே முரணானது. அடுத்தடுத்து நடைபெறும் இத்தகைய கொள்ளைகளாலும் அசம்பாவிதங்களாலும் மக்கள் கொதிப்படைந்து இன்று புனிதமான இயக்கங்களை வெறுக்குமளவுக்குத் துணிந்து விட்டார்கள். ஸ்ரீலங்கா அரசு கைகொட்டிச் சிரிக்குமளவுக்கு இச்செயல்கள் அமைகின்றன.

இதுகாறும் தனிநபர்களிடமும் தனிநிறுவனங்களிடமும் நடந்த கொள்ளைகள் இன்று தெய்வ சன்னதிகளிலும் நடைபெறும் அளவிற்கு இவர்களின் அடாவடித்தனம் அதிகரித்துள்ளது.

இவ்வாறான செயல்கள் வளர்த்த கடா மார்பிலே பாய்வதுபோல் உள்ளது. வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயே தாக்கப்படாத இந்த ஆலயம் இன்று நம்மவர் கையாலே தாக்கப்படுவது ஏனோ? விடுதலை என்ற போர்வையினுள் ஒளிந்திருக்கும் கொள்ளையர்களே இவ் விசமத்தனங்களில் ஈடுபடுகின்றனர். விடுதலைத் தாபனங்களா கொள்ளையர்களா என எண்ணும் ஈழ தேசத்தவர்முன், இச்செயலில் ஈடுபடும் விஷமிகளை இனம் கண்டு திருத்தவேண்டியது எமது தாயகத்தை அமைக்க திடசங்கற்பம் பூண்டிருக்கும் விடுதலைத் தாபனங்களின் தலையாய கடமையாகும். தாயகத்தை அமைக்கும் பணியில் தமது உயிரையே பணயம் வைத்து உழைக்கும் தியாகச் சுடர்களுக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் இத்தகைய செயல்கள் இடம்பெறுகின்றன இவற்றை அடக்க முன்வரும் புனிததாபனங்களே. மக்களின் நன்மதிப்பைப் பெற்றுத் தமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லமுடியும் என்பது கண்கூடு.

புனிதமான விடுதலைப் போராளிகள் நிச்சயமாக இதனைச் செய்திருக்கமாட்டார்கள். இக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை இனங்காணப் புனிதமான இயக்கங்கள் முன்வரவேண்டும்.

எனவே இவ்வாலயத்திற்குரிய வலம்புரிச் சங்கையும் திருவாபரணங்களையும், ரொக்கப்பணத்தையும் ஒருவாரத்தினுள் திருப்பி ஒப்படைக்கும்படி பணிவுடன் வழிபடுவோர் சார்பில் வேண்டுகிறோம்.

வே கிருஷ்ணசாமி,
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

## முதுகெலும்புள்ள அன்பரின் மொட்டைக் கடிதம்

பொது மக்களின் அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கும் பொது மக்களின் அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கும் அரிய சாதனமாக விளங்குவது பத்திரிகை, அதுவும் கட்சி, அரசியல், சமய சார்பற்ற பத்திரிகைகளின் பொறுப்பு மகத்தானது.

எனவே நாம் ஒரு கருத்தை வெளியிடும்போது அதற்கு மாறான கருத்துடையவர் நேரடியாக எமக்கு எழுதலாம்- விளக்கம் தரலாம்- அதைவிடுத்து அநாமதேயக்கடிதங்களில் ஒளிந்துக் கொண்டு மொட்டைக்கடிதம் எழுதுவதும் தம்மை யார் என்று காட்டிக் கொள்ளாமல் தொலைபேசியில் வசைபாடுவதும் நாகரிகமற்றது.

அண்மையில் எமக்கு வந்த ஒரு அஞ்சல் அட்டை இடது கையால் எழுதப்பட்டு முகவரியில்லாமல், முதுகெலும்பில்லாதவர்கள் என்று எம்மை வசைபாடுகின்றது.

முதுகெலும்புள்ள அந்த அன்பர் தம் சொந்தப் பெயரில் முழு விலாசத்துடன் எழுதியிருப்பின் அதனை மகிழ்ச்சியாக வரவேற்று விளக்கமும் அளித்திருப்போம். இன்றுள்ள நிலைமையையும் எமது பணியையும் குறைகூறமுற்படுபவர்கள் இருட்டறையில் அமர்ந்திருப்பவர்களே.

— ஆ-ர்

## சக்கர பந்தத்தில் சரஸ்வதி துதி

"கற்றோர்களேற்றிடும் கலாராணி வீரம், நிதி, கல்வி தா...
நற்றாமரைக் கன்னி பிள்ளாணி யாம்பல் நகைதுலங்க
பற்றொடு தோன்றி நீயே நவின்றபே பரிந்து திடத்தினோடே
கற்றோனே நல்லிப் படிமிசை தாவெனக்கருமை ஆயேசக்தி!"

— வன்னியூர்க் கவிராயர்

0 0 0 0 0

### நன்மையாவும் நல்கிடுவாள்

சீரும் சிறப்பும் நல்கிடுவாள்
சீலமாய் வாழ அருள்புரிவாள்
இஷ்டமாய் தொழுவோர்க்கே — தேவி
இடரெல்லாம் தீர்த்திடுவாள்

எங்கும் நிறைந்திருப்பவளே
எம்மைக் காத்து அருள்பவளே
நன்மை யாவும் புரிபவளே
நவ சக்தி புரியும் நாயகியே

— ச. கு. க. கௌரி

## இன்று மகாநவமி

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்றுவரும் நவராத்திரி விழாவில் இன்று செவ்வாய் கிழமை மகாநவமியும் நாளை புதன் கிழமை விஜயதசமியும் மானம்பூவும் நடைபெறவுள்ளது.

சிவஞான வாரியம் உடுவில் பணி மன்றம், பாலர் மன்றம் வெள்ளிக் கிழமை கோசம் இவ்வாலயத்தில் திருமுறைப் பாராயணம் செய்து வருகிறது.

(மா)

## இப்படியும் நடக்கிறது

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் மேலும் இரு 'புதியவர்கள்' நியமிக்கப்பட்டுள்ளனரா?

இம்மாதம் பதினேழாம் திகதி வெளியான 'திவயின' (சிங்களத் தினசரி — 'ஐலண்ட்' குறூப்) பத்திரிகையைப் பார்த்த போது இப்படி ஒரு 'மயக்கம்' ஏற்பட்டது! இப் பத்திரிகையில், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் பட்டியலில் திரு: எம். சிவநாத, பேராசிரியர் சின்னத்தம்பி என்ற இருவரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

அருளி ஆராய்ந்ததில் திரு: சிவநாதன், பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோரே 'அவ்விதம்' இடம் பெற்றிருந்தது தெரியவந்தது.

குழுவின் பெயர் போர் நிறுத்தக்கண்காணிப்பு உறுப்பினர்களின் பெயரிலாவது சற்று உஷார் வேண்டாமா?

— ஊடுருவி

## இரு பிரிவுகளிலும் கனகரெத்தினம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்திற்குமிடையே இரு பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம், இரு பிரிவுகளிலும் வெற்றியீட்டியது.

சிறந்த வீரர்களுக்கான கிண்ணங்களை இரு பாடசாலைகளும் பெற்றன. வெற்றிக் கிண்ணங்களை கனகரெத்தினம், மத்திய மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. இப் பரிசுக் கிண்ணங்களை வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவரும் பிரபல வர்த்தகருமான திரு. எஸ். பொன்னுத்துரை வழங்கி இருந்தார் (ஐ

## இன்[...]லன்

மாதம்: ஐப்பசி
திகதி 6 (22- 10- 1985)
கிழமை: செவ்வாய்
திதி: நவமி
நக்ஷத்திரம்: திருவோணம்

மேடம்:- அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும் அறவழியில் நாட்டம் பிறக்கும் ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

இடபம்:- எதிர்பார்த்த பொருள் வரவிற்கு இடமுண்டு பூமியால் லாபம் கிடைக்கும் புத்திரர் வழியாலும் நன்மை உண்டு.

மிதுனம்:- உறவாகக் கெடுப்பதற்குப் பகையாளிகள் வருவர் பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடும் கிலக்கு உஷ்ண சம்பந்தமான ரோகம் ஏற்படலாம்.

கடகம்:- வெற்றி உமது அருகில் விரைந்துவரும். எதிர்த்தவர்களே ஆதரவு தருவார்கள். கஸ்திரவழியாலும் நன்மை சேரும்.

[...]:- எக்கருமத்தையும் [...]த்துணிக, செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றக்கூடும் உடல் நலமும் சிறிது பாதிக்கப்படும்.

கன்னி:. உறவு முறைகள் பலப்படும். உற்சாகம் பெருகும். புதிய நண்பர்கள் புடைசூழ்வர் வாழ்த்தும் உண்டு.

துலாம்:- விதிதைவில் வெற்றியாணும், பொது மக்கள் தொடர்புடன் புகழ்வந்து சேரும் வேண்டியதும் கிடைக்கும்.

விருச்சிகம்:- மேற்தவும் பொருள் சேரும் மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும். திடுக்கும் செய்தியுடன் தேறுன வாழ்வுமுண்டு.

தனுசு:- எண்ணங்கள் ஆதாரம் சிந்தையிலே வந்து உதும். ஏமாற்றம் தாக்கும் விந்தையான போக்கு வேடிக்கை காட்டும்.


மகரம்.- ஊமறம் நெஞ்சத்துடன் தாக்கட்டத்துவீர்கள் எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக்கொள்ளவும். உடல் நலத்தையும் பேணவும்.

கும்பம்:- போதா மென்ற மனமும் புண்ணிய விருப்பும் தலைதூக்கும். பொருள் வரவுக்கு உகந்ததினம்.

மீனம்:- குடும்பத்தில் சிறு பூசல் தலைதூக்கும் ஆத்திர உணர்ச்சியால் மோதல் ஏற்படும். அமைதியுடனிருக்கவும்.

திருமலை
வே: ரவீந்திரன்

## லயன்ஸ் புதிய தலைவர்



(கிளிநொச்சி)

கரைச்சி லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராக சமூக சேவையாளரும், வர்த்தகருமான ஆ. ச: பாலேந்திரன் பதவியேற்றுள்ளார். பல்வேறு பொது ஸ்தாபனங்களில் அங்கம்வகிக்கும் திரு பாலேந்திரன் நலிவுற்று உள்ளதும் இன்னர் சமுதாயத்தின் நல்வாழ்விற்காகவும் தமது பதவிக்காலத்தில் பாடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்வி வட்டார வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில், வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் முதலாம் இடத்தையும் 2ம் இடத்தை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியும், 3ம் இடத்தைக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும் பெற்றுள்ளது.

இப்போட்டிக்கு சிறப்புவிருந்தினராக கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. தம்பிராசா கலந்து கொண்டார் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் திரு வி. கே. கணபதிப்பிள்ளை நன்றி உரை நிகழ்த்தினார்.


Lipton

# எச்சரிக்கை!

## லிப்டன் லாவோஜி

போலி லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாக எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க வர்த்தக அடையாள சட்டத்தின் பிரகாரம், பதிவுசெய்யப்பட்ட லாவோஜி வர்த்தக அடையாளத்தை மீறும் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது பொருட்களை விற்பனை செய்வோர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும். எனவே போலி லாவோஜிகளை தயாரிப்போர் அல்லது விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அசல் லாவோஜி தேயிலையை எமது கிளைகளில் அல்லது எமது மொத்த வியாபாரிகள் அல்லது சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

லிப்டன் சிலோன் லிமிட்டெட்,
த. பெ. எண் 86,
கொழும்பு.




லிப்டன் லாவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்.

# யாழ்ப்[illegible]த்தில் 500 திருமலை அரச ஊழியர்கள்

திருகோணமலை இன்றைய நிலை இதுதான். அரசாங்க காரியாலயங்கள் நன்பகலுடன் செயல்படுவதில்லை. தமிழ்ப் பாடசாலைகள் நடைபெறுவதில்லை. சில பாடசாலைகளில் அகதிகள் முகாம். தபாற்கந்தோரில் பலசேவைகள் வழமைபோல் நடைபெறவில்லை. உபதபால் நிலையங்களிலும் இந்த நிலைதான். 'இரவில் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு, பகலில் சனநடமாட்டம் குறைவு.'

திருமலையிலிருந்து இம் மாதம் 11ம் தேதி புறப்பட்டு வந்த அரச ஊழியர்களில் ஒருவர் இப்படித் தெரிவித்தார்.

திருமலையில் கடமையாற்றும் சுமார் 200 தமிழ் அரசஊழியர்கள் லீவு எடுத்துக் கொண்டு இம் மாதம் 11ம் தேதி பஸ்ஸில் வவுனியா வந்தார்கள். அங்கிருந்து பல்வேறு வாகனங்களில் இங்கு வந்தார்கள்.

ஏற்கனவே ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் திருமலையில் கடமையாற்றிய சுமார் 300 அரச ஊழியர்கள் யாழ்ப்பாணம் வந்துவிட்டார்கள். இவர்களில் எவரும் இதுவரை திரும்பிச் செல்லவில்லை.

விடுதிகளில் தங்கியிருக்கும் இவ் ஊழியர்களுக்கு மீண்டும் செல்ல விருப்பம். ஆனால் அவர்கள் போவதற்குப் பாதுகாப்பு கேட்கிறார்கள்.

திருமலையில் கடமையாற்றும் அநேக ஊழியர்கள் நிலாவெளி, உப்புவெளி, கன்னியா பகுதிகளில் வீடுகளில் வாடகைக்கு இருந்தார்கள். சிலர் பகுதி வீட்டில் குடியிருந்தார்கள். இன்று அங்கு வீடுகளில் எவருமில்லை. சில வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில் எப்படி அங்குபோய் இருப்பது என ஊழியர்கள் கேட்கிறார்கள்.

திருமலையிலிருந்து அரச ஊழியர்கள், கூட்டுத்தாபன ஊழியர்கள், தபாற் கந்தோர் ஊழியர்கள், கச்சேரிக்கந்தோர் ஊழியர்கள், உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் உட்பட சுமார் 500 பேர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள். இவர்களில் பலர் குடும்பத்துடன் அங்கிருந்தவர்கள். எல்லோரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம் வந்துள்ள ஊழியர் எவருக்கும் கடந்த 2 மாதங்கள் சம்பளம் வழங்கப்படவில்லை. பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு இம் மாதம் 3ம் தேதி தங்கள் நிலைமையை விளக்கி மகஜர் அனுப்பியுள்ளனர்.

திருமலையிலும், சுற்றுப் புறங்களிலும், பல சம்பவங்கள் தினமும் நடைபெறுவதாகவும், தினமும் திருமலையிருந்து அகதிகள் வந்துகொண்டிருப்பதாகவும், திருமலை அகதி முகாம்களில் உள்ள அகதிகள் தங்கள் வீடுகளைப் பார்க்கச் செல்லும்போது பயமுறுத்தப்படுவதாகவும் மகஜரில் தெரிவித்துள்ளனர்.

களும் மீண்டும் திருமலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஊர்காவல் படையினரிடமிருந்து ஆயுதங்களை திரும்பப்பெற்றால்தான் மீண்டும் அமைதி ஏற்படும் என்று அகதிகளில் பலர் தெரிவித்தனர்.

பேரா திறந்த கல்லூரிப் புல்முலையைச் சேர்ந்த 11 பேரும் இம்மாதம் 26ந் தேதி திருமலைக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் அவதானிக்கப்போகிறார்கள். திருமலையில் மீண்டும் அமைதியை ஏற்படுத்துவதற்கான வழிவகையை செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அமைதி ஏற்பட்டால் அகதிகள் திருமலைக்குத் திரும்புவார்கள். அகதிகள் திரும்பினால் பாடசாலைகள் காரியாலயங்களும் வழமைக்குத் திரும்பும். ஊழியர்களும் திரும்புவார்கள்.

திருமலை உட்பட மற்றும் இடங்களிலிருந்து குடிபெயர்ந்து வேறுஇடங்களுக்கு சென்றவர

## வடக்கு நோக்கி வரும் திருமலை அகதிகள்

– கா. யோகநாதன் –

அரச ஊழியர்கள் பலரின் வீடுகள் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்றும் சில வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இந்த நிலையில் உடனடியாக சென்று குடியமர்வது கஷ்டமென்றும் ஊழியர் தெரிவித்துள்ளனர். மீண்டும் திருமலைக்குச் சென்று தங்கள் வீடுகளில் தங்கி பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பவேண்டும் என்பது தங்கள் எல்லோரது விருப்பமென்றும், ஆனால் தற்போது தொடர்ந்தும் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் மீண்டும் ஒருதரம் தங்கள் உயிரைப் பணயம் வைக்க முடியாத நிலையிலிருப்பதாகவும் மகஜரில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

திருமலை முதலில் வழமைக்குத் திரும்பவேண்டும். அதற்கு வடக்குக்கு வந்துள்ள சுமார் 20,000 திருமலை அகதிகளை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதே சமயம் யாழ்ப்பாணம் வந்துள்ள திருமலை அகதிகள் நாளை புதன்கிழமை யாழ்நகரில் தங்கள் நிலையை உலகிற்கு எடுத்துக்காட்ட மாபெரும் ஊர்வலமொன்றை நடத்துகிறார்கள். ஊர்வல முடிவில் யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் மகஜர் ஒன்றைக் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம் மகஜரில் தமக்கு நட்டஈடு வழங்கவேண்டுமென்றும் மீண்டும் தங்கள் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது. கண்காணிப்புக் குழுவினரை வடபகுதி அரசாங்க அதிபர்கள் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் யாழ் அரசாங்க அதிபர் யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகளின் கோரிக்கைகளையும் எடுத்து கூறுவர் என அகதிகள் எதிர்பார்க்கிறார்கள். இந்த அகதிகள் ஊர்வலத்தை தமிழ் மகளிர் அவையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

1958ம் ஆண்டு கலவரத்தில் ஆயிரக்கணக்கான அகதிகள் கொழும்பிலிருந்து வந்தார்கள். அடுத்த கிழமைகளில் நிலைமை சீராகியதும் திரும்பிச் சென்றனர். 1977 கலவரத்தில் தென்பகுதியிலிருந்து பலர் அகதிகளாக வந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் திரும்பி தங்கள் சொந்த இடத்திற்கு நிலைமை சீரானதும் சென்றனர். ஒரு பகுதியினர் திருமலை வவுனியா கிளிநொச்சி பகுதிகளில் குடியேற்றப்பட்டனர். 1983 கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக வந்தனர். இவர்களிலும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியவர்கள் போக மற்றையோர் வடக்குக் கிழக்கில் பலஇடங்களில் குடியேற்றப்பட்டனர். குடியேற்றப்பட்டவர்களில் பெரும்பாலானோர் மலைநாட்டைச் சேர்ந்த தமிழர்களாகும்.

திருமலை அகதிகளைப் பொறுத்தவரை அநேகமாக எல்லோரும் மீண்டும் திருமலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். திருமலையில் அவர்களுக்கு பாரம்பரிய தொடர்பு இருக்கிறது. அங்கு காணி நிலம், வயல் புலம் இருக்கிறது. உற்றார், உறவினர் நண்பர்கள் இருக்கிறார்கள். வழக்கமாக அங்கு

[17]

செய்த தொழில் இருக்கிறது. வீடுவாசல் ஆடு மாடு கோழி உண்டு ஆதலால் இவர்கள் எல்லோரும் புதிய இடத்தில் குடியேறி வாழ்வது கஷ்டமானதாகும்.

கடந்த காலங்களில் (1958, 1977, 1983) அகதிகளாக வந்தவர் ஒருவர் கூட இன்று இங்கு இல்லை. அவர்கள் எல்லோருக்கும் வழி பிறந்தது. விமோசனம் கிடைத்தது. அதேபோல தற்போது இங்குள்ள அகதிகளுக்கும் நிச்சயம் வழி பிறக்கும். வாழ்வு கிடைக்கும். அதுவரை அவர்களை அன்போடு ஆதரித்துப் பராமரிப்பது வடபகுதி தமிழ் மக்களின் பெரும்பணியாகும். (முற்றும்)

## பாடசாலை உதைபந்தாட்ட போட்டி:

# சென்.ஜேம்ஸ் முன்னணியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம், யாழ் மாவட்டத்தில் உதைபந்தாட்டப் போட்டியில்பிரபல்யமான யாழ். இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, ஒஸ்மானியாக் கல்லூரி ஆகிய கல்லூரிகளை வென்று முன்னணியில் திகழ்கின்றது.

யாழ்ப்பாண கல்வி இலாகா வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடாத்திவரும் உதைபந்தாட்டப் போட்டிகளில் 15-வயதுக்குட்பட்டோர் பிரிவில் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம் சிறப்பாக விளையாடி வருகின்றது.

சென். ஜேமஸ் மகாவித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரியை 1—0 கோலால் வெற்றிபெற்றது. இப்போட்டி யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது

சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்துக்கும், ஒஸ்மானியாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம் 2—0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டி ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரியை 4—2 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### வெற்றி தோல்வி இல்லை

சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயத்துக்கும், சென் சாள்ஸ்மகா வித்தியாலயத்துக்கும் இடையில் 1 வயதுக்குட்பட்டோர் பிரிவில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டி வெற்றி தோல்வியின்றி (1-1) முடிவடைந்தது.

### சென். சார்ள்ஸ் வெற்றி


சென். சார்ள்ஸ் மகாவித்தியாலயத்துக்கும், நவாந்துறை மகா வித்தியாலயத்துக்குமிடையில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில், சென் சார்ள்ஸ் மகாவித்தியாலயம் 2-1 கோல்களால்வெற்றி பெற்றது.

### நாவாந்துறை வெற்றி

நாவாந்துறை மகாவித்தியாலயத்துக்கும் சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்துக்குமிடையில் 15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் நடைபெற்ற போட்டியில் நவாந்துறை மகாவித்தியாலயம் 2—0 கோல்களால் வெற்றிபெற்றது. (வி)


## காணவில்லை

திரு. எஸ். குகதாஸ்



எனது கணவர் திரு.எஸ். குகதாஸ் 5-9-1985ல் மட்டக்களப்பிலிருந்து காலை புறப்பட்ட புகையிரத மூலம் யாழ்ப்பாணம் வருவதற்கு கொக்கிராவைவரை பயணச்சீட்டு பெற்றிருந்தார். ஆனால் அவர் இதுவரை வீடுவந்து சேரவில்லை. அவர் விபரம் அறிந்தவர்கள் அதேவண்டியில் பிரயாணம் செய்த யாராவது தயவுசெய்து கீழ்உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நன்றி!

திருமதி ஜெயமணிதேவி குகதாஸ், A. G. A. லேன், வல்வெட்டித்துறை.

(1344)

## முதலாண்டு நினைவஞ்சலி

இ. பரிபூரணன் (அமுதன்)



தாயின் மடியில்: 27–10–1957

தாயகமண்ணில்: 22–10–1984

அமுதா,
நீ நேசித்த இலட்சியங்கள் எங்கள் தோழமை,
இதயங்களூடாக தாங்கிச் செல்லப்படுகின்றன.

இங்ஙனம்,
அப்பா. அம்மா, சகோதரர்கள். உறவினர்கள்.
மானிப்பாய்.

1349

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. அலோசியஸ் ஜெயகரன் (டெறி)

ஆண்டவன் படைப்பு: 24–06–60

அரக்கர்கள் அழிப்பு: 22-10-84



அன்பின் தோழனாய், ஆன்றோரின் நண்பனாய், இளையோரின் அண்ணனாய், ஈசனடித் தொண்டனாய், உறவினர்க்கு உற்றவனாய், ஊரார்க்கு உழைப்பவனாய், ஒற்றுமையின் ஓர் தூணாய் விளங்கிய எம் தோழன் எங்கே?

அழியும் நின் உடம்பை அரக்கர்கள் அழித்தனரோ! ஆற்றவொண்ணாத் துயரோடு ஆன்மா சாந்திபெற, சனசமூகநிலையத் தோழர்கள் இறைவனை வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் செயலிழந்து நிற்கும்!

சனசமூக நிலையத் தோழர்கள்.

மாரீசன்கூடல், இளவாலை.

(1342)

# ✱ மேற்கு ஜேர்மனியில்———— நடராசப்பெருமான், துர்க்கை ஆலயங்கள்

## நவராத்திரி விழாக்கள்; இன்றுசிறப்பு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

மேற்கு ஜெர்மனியில் உள்ள நடராசப்பெருமான், துர்க்கா தேவி ஆகிய இரு ஆலயங்களில் விஜயதசமியை முன்னிட்டு சரஸ்வதி பூசைகளும், சிறுவர்களுக்கான ஏடு தொடக்கலும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும்,

மேற்கு ஜெர்மனியில் மிக அண்மையில் 'கவைற்றே' என்ற நகரத்தில் துர்க்கை அம்மன் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது; இங்கு டொர்ட்முன் நகரத்தில் நடராஜப் பெருமான் ஆலயம் ஏற்கனவே அமைக்கப்பட்டுவிட்டது இவ்விரு ஆலயங்களிலுமே மிகச் சிறப்பான முறையில் நவராத்திரி விழாக்கள் கொண்டாடப்படுகின்றன

இந்த ஆலயங்களுக்கு நவராத்திரி தினத்தை முன்னிட்டு பரந்துபட்டு இருக்கும் ஏராளமான தமிழ்மக்கள் தினமும் சென்று வழிபட்டு வருகின்றனர் என்றும் பூசைகள் முடிந்ததும் பிரசாதம் (அவல், கடலை, வாழைப்பழம் என்பன) நம்நாட்டில் நடப்பது போன்ற தினமும் வழங்கப்படுவதாகவும், அர்ச்சனைகளும் தினமும் நடைபெறுகின்றன என்றும் மேற்கு ஜெர்மனியில் உள்ள ஹானனில் வசிக்கும் கோண்டாவிலைச் சேர்ந்த செல்வரெத்தினம் செல்வராசா 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்துள்ளார். (ஐ)

**சரவணபவன் மினி சினிமா**
[4 அடி அகலத்திரையில்]
10-30, 2-30, 4-30, 7-00
Private Lesson
(Part II)

**மனோகரா வெண்திரையில்**
10-30, 2-30, 6-30
இன்று முதல்
புதிய வெளியீடு
Kirk Douylas
John Sehngider in
EDDIE MACON'S RUN
Color
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்

**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30,
விஜயபாபு — ரதிதேவி
"ஆசை மச்சான்"
இரவு 9-15 மணிக்கு
"Turkey shoot"
(WAR)

**ஸ்ரான்லி மினி**
5'x5' திரையில்
10-30, 2-15
4-30, 6-45
Girl from India
ஒரு இந்தியப் பெண்ணிற்கு வெளிநாட்டில் கிடைத்த மறக்கமுடியாத சம்பவங்களைச் சித்தரிக்கும் படம்,
Adults Only

**உஷா மினி**
10-30, 2-30, 4-45, 6-45
ESCAPE FROM THE BRONX
தன் குடும்பத்தைக் கட்டுத்தியிட்ட ஆயுதப் படையினரை பழிவாங்குவதில் இவன் ரம்போவைவிட பயங்கரமானவன் வீதிகளில் நடந்துவரும் ஆயுதப் படையினர் மீதான தாக்குதல் - இளைஞர் குழுவுக்கும் ஆயுதப் படையினருக்கும் நேரடி மோதல். தவறவிடாதீர்கள்.
புதிய வெளியீடு

**வெலிங்டன்**
10-30, 2-30 4-15, 6-30
பயங்கர பேய் காட்சிகள் நிறைந்த
POLTER GRIST
(கலர்)
வயதுவந்தவர்களுக்கு மட்டும்

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
கமல்,
சிவகுமார், ஜெயசித்திரா நடித்த
சொல்லத்தான் நினைக்கிறேன்
புதிய பிரதி

## பாலம் தகர்ப்பு

(கொழும்பு)

திருகோணமலை வில் உள்ள பாலம் ஒன்று இம் மாதம் 17ம் திகதி தீவிரவாதிகளினால் தகர்க்கப்பட்டதென்றும், பாலம் சிறிது சேதமடைந்துள்ளதாகவும், அரசு அறிவித்துள்ளது.

திருமலையில் 18ம் திகதி இ,போ,ச பஸ் ஒன்று தீவிரவாத இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாகமேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அன்னையர் முன்னணி நல்லூர்க்கிளை அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மகளிர் அவை"யினரால் கச்சேரி-நல்லூர் வீதியில் நடாத்தப்பட்டுவரும் 'யாழ் அகதிகள் முகாமுக்கு அன்னையர் முன்னணியின் நல்லூர்க்கிளை இருமூடை அரிசி, பால்மா, மருந்துவகைகள், உடுபுடவைகள் என்பனவற்றை வழங்கியுள்ளது. மேலும் உதவிகளை வழங்க முயற்சிப்பதாக இக்கிளையினர் தெரிவிக்கின்றனர். (ஐ)

## ஆங்கில

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கான வகுப்புகள் ஆரம்பமாகும்,"

வடபகுதி தனியார் மருத்துவக் கல்லூரி கமிட்டி உறுப்பினரான டாக்டர் ரி. கங்காதரன் மேற்கண்டவாறு "ஈழநாடு" வுக்குத் தெரிவித்தார்.

மருத்துவக் கல்லூரி வகுப்புகளுக்கு இதுவரை எழுபது மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரி[...]றவு ஆஸ்பத்[...]ர் மருத்துவக் [...]ங்க முடிவு [...]வதாகத் தெரிவித்[...] ஆஸ்பத்திரியை [...]பலவிதத்திலும் தரம் உயர்த்தி, வைத்திய நிபுணர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மருத்துவக் கல்லூரிக்குத் தேவையான கட்டிடங்களையும், அங்கு அமைக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இதே சமயம் தனியார்மருத்துவக்கல்லூரி அமைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (ச)

## திருநெல்வேலி அம்பாள் கோவிலில் இன்று

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள் மிகு முத்துமாரி அம்பாள் கோவிலில் இன்று செவ்வாய்கிழமை கேதாரகௌரி விரத ஆரம்பத்தை முன்னிட்டு பிற்பகல் 5 மணிக்கு கௌரி நோன்பும் விசேஷ பூசையும் நடைபெறும் தொடர்ந்து அடுத்தமாதம் 12 ம் திகதி கௌரி நோன்பு இறுதி நாள்வரை தினமும் நோன்பு பூசையும் இடம் பெறும்.

இவ்வாலயத்தில் இன்று பிற்பகல் சூரசங்காரமும் நாளை புதன் பிற்பகல் மாலைப்பூ உற்சவமும். (ச)

## இலங்கை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வார் என்று நம்பப்படுகிறது பஹாமஸிலிருந்து நாடு திரும்பும் வழியில் அவர் புதுடில்லிக்கு விஜயம் செய்வார் என்று நம்பிக்கையான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிமுறைகள் குறித்து பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி திரு: ஜே ஆர். ஜெயவர்த்தனாவும் பஹாமாஸில்நேற்றுமுன் தினம் பேச்சுக்கள் நடத்தினார்கள்.

இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரியும் ஜனாதிபதி ஜே ஆர்: ஜெயவர்த்தனாவுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்;

இந்தச் சந்திப்புகளை ஆதாரம் காட்டும் நம்பகமான வட்டாரங்கள்; புதுடில்லியில் இரு தலைவர்களும் சந்திக்கும் போது; இலங்கை இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணும் அடுத்த சந்திப்பை பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் வைத்துக்கொள்வதுபற்றி முடிவு எடுப்பார்கள் என்று தெரிவித்தன

பஹாமாஸ் தலைநகரில்நடைபெற்ற சந்திப்பில்; யுத்த நிறுத்தத்தின் போது. பாரிய அசம்பாவிதங்கள் ஏற்படாத வண்ணம் கண்காணிப்புக்குழு உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாக அறியப்படுகிறது

அதேநேரத்தில் இலங்கை அரசாங்கத்தின் மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி பொருத்தமான தீர்வல்ல என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் அவரது ஆலோசகர்களும் கருதுவதாக புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன.

## வைத்தீஸ் வராவில் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய இந்து மாணவர் மன்றம் இன்று அங்குள்ள விவேகானந்தா மண்டபத்திலே நவராத்திரிக் கலைவிழாவை நடத்துகின்றது: காலை 9 30 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா சுப்பிரமணியம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துகின்றார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன நவராத்திரியை யொட்டி வித்தியாலயத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குரிய பரிசில்களும் வழங்கப்படும்.

## 'அமிர்' பஹாமாஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை செய்திகள் தெரிவித்தன.

பஹாமாஸ் தலைநகரில் முக்கிய ஆலோசனைகள் நடைபெற்றிருப்பதால் திரு அமிர்தலிங்கம் இந்திய அரசின் அழைப்பின் மீது பஹாமாஸ் தலைநகர் சென்று ஆலோசனைகளில் கலந்திருக்கலாமென்று லண்டன் வட்டாரங்கள் தெரிவித்ததாக மேற்படி ஏஜென்சி செய்திகள் கூறுகின்றன

## வவனியா அபிவிருத்திச்சபை கேள்வி அறிவித்தல்

### இறைச்சிக் கடைகள், சந்தைகள் குத்தகை — 1986

வவனியா அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையிலுள்ள இறைச்சிக் கடைகள், சந்தைகள் 01-01-1986 தொடக்கம் 31-12-1986 வரையான காலப்பகுதிக்கு குத்தகையில் விடுவதற்கு கேள்விகள் அழைக்கப்படுகின்றது. கேள்விப் பத்திரங்களை அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்தி சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் 20-11-1985ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களில் ஒரு பிரதி மாவட்ட செயலாளருக்கும், அடுத்த பிரதி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கும் ஒரே நேரத்தில் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு பதிவுத் தபாலில் 21-11-85 பி. ப. 3-00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் கேள்விகள் 21-11-85 பி ப 3-00 மணிக்கு உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம். கேள்விகளை ஏற்றல், நிராகரித்தல் விடயத்தில் மாவட்ட செயலாளரின் தீர்ப்பே இறுதியானதாகும். சித்தி பெற்ற கேள்விக்காரர் கேள்வித்தொகையில் 1/3 பங்கை உடன் காசாகச் செலுத்தத் தயாராக இருக்கவேண்டும் வேறு தேவையான விபரங்களைக் கந்தோர் வேலை நேரங்களில் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் அறிந்துகொள்ளலாம்.

| உப- அலுவலகம் | குத்தகை விபரம் | கேள்விப் பிணை (மீளளிக்கக் கூடிய) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாத) | அங்கீகரிக்கக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| **இறைச்சிக் கடைகள்** | | | | |
| மேல்பற்று கிழக்கு நெடுங்கேணி | நெடுங்கேணி இறைச்சிக் கடை | 100/- | 50/- | 3750/- |
| சின்னச் செட்டிக் குளம் கிழக்கு | செட்டிகுளம் மாட்டிறைச்சிக் கடை | 100/- | 25/- | 600/- |
| " | மாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 100/- | 25/- | 600/- |
| **சந்தைகள்** | | | | |
| மேல்பற்று கிழக்கு நெடுங்கேணி | நேடுங்கேணிச் சந்தை | 100/- | 50/- | 6500/- |
| மேல்பற்று தெற்கு | நயினாமடுச் சந்தை | 50/- | 25/- | 250/- |
| சின்னச்செட்டி குளம் கிழக்கு | செட்டிகுளம் சந்தை | 100/- | 50/- | 3600/- |

கே. சீ. லோகேஸ்வரன்,
மாவட்டச் செயலாளர்,
அபிவிருத்திச்சபை,
வவனியா.

அபிவிருத்திச் செயலகம்,
வவனியா,
15-10-1985.

(1366)

## முதலாவது பிறந்த நாள்

### செல்வன் சிவநேசன் பிரதீபன்



இணுவில்மேற்கில் வசிக்கும் சிவநேசன்-ஜெகதீஸ்வரி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் பிரதீபன் தனது முதலாவதுபிறந்த தினத்தை இன்று (22-10 85 தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, பப்பா. அப்பம்மாமார், ஐயா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், ஜெர்மன் மாமா, சிங்கப்பூரில் இருக்கும் மாமா, சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அத்தான்மார், மச்சாள்மார், ஆகியோர் இவரைப் பல்கலைகளும்பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

1376

ஈ[illegible]நாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## "அரசு தீர்வு தமிழ்மக்களுக்கு போதுமானதல்ல"

(யாழ்ப்பாணம்)

"ஈழம் செய்திப் பலகை"யின் இன்றைய தகவல் இது:-

ஸ்ரீலங்கா அரசு முன்வைக்கும் தீர்வு ஈழமக்களுக்குப் போதுமானதல்லஎன்று இந்திய அரசு கருதுகிறது.

மன்னார் - முருங்கனில் கண்ணிவெடி. கலிப்படையில் ஐவர் பலி. மன்னார் - பேசாலையில் புதிராணுவ முகாம். அம்பாறையில் பொலிஸ் கொமாண்டோக்கள் வெறியாட்டம் 7 பேர் கொலை பலர் கைது ஈழமக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்த 'தமிழீழ ஆதரவாளர் அமைப்பு' சென்னையில் சைக்கிள் ஊர்வலம் கொள்கைகளைக் கண்டித்து தமிழீழ ராணுவத்துண்டுப்பிரசுரம். 'மக்களை மதியுங்கள்' என தமிழீழ விடுதலைப் புலிகள் துண்டுப்பிரசுரம்.

## ஐ.நா. மனித உரிமை தினம்

(வண்ணார்பண்ணை)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை தினத்தையொட்டி யாழ். மாநகரசபை நடத்திய மாநகரப் பிரதேச கல்லூரிகளுக்கிடையிலான "மனித உரிமை" தொடர்பான பேச்சுப்போட்டி கடந்தஞாயிற்றுக் கிழமை காலை மாநகர இந்து விடுதியில் இடம்பெற்றது.

உயர்வகுப்பு மாணவ, மாணவிகள் 27 பேர் இப் போட்டியில் கலந்துகொண்டனர்.

இப்போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கான பரிசில்களும் அன்பளிப்புக்களும் இன்னொருதினத்தில் வழங்கப்படவுள்ளன. யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.



யாழ். கில்னர் மண்டபத்தில் தையற்கலை டிப்ளோமா பயிற்சிபெற்ற இருபது மாணவிகளுக்கான நற்சான்றிதழ் வழங்கும் வைபவம் வண. அல்பேர்ட் அன்ரனி தலைமையில் நடைபெற்றது. சான்றிதழ் பெற்ற மாணவிகளுடன் சான்றிதழ்களை வழங்கிய வண அல்பேர்ட் அன்ரனி இங்கு காணப்படுகிறார். (ஐ)

படப்பிடிப்பு: எஸ். செல்வலிங்கம்

## தொழிலாளி கடத்தப்பட்டாரா?

(வண்ணார்பண்ணை)

வேலணை கிழக்கைச்சேர்ந்த விவசாயத் தொழிலாளியான சபாபதி சண்முகராசா (வயது 30) என்பவரைத் தேடும் முயற்சியில் இவரது குடும்பத்தினர் தோல்விகண்டு விட்டதாகத்தெரிவித்துள்ளனர்.

இவரது உழைப்பின் மூலமே இக் குடும்பத்தினர் சீவியம் நடத்தி வந்ததாகவும், இவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்படுவதாகவும் இவரது குடும்பத்தினர் கூறுகின்றனர்.

இவர் விவேகக் குறைவானவரென்றும், சாதாரண தொழிலாளி என்றும் பலசமூகசேவை இயக்கங்களுக்கு முறைப்பட்டுள்ளனர். இவரை யாரோ அழைத்துச் சென்றதாக அறியப்படுகிறது.

## 'அவசர' இளைஞர் படுகாயமடைந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை, 'யாழ்தேவியில்' ஏறும்பொழுது தவறிவீழ்ந்த ஒரு இளைஞர் படுகாயமடைந்தார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த ஏ. விஜயலிங்கம் (27-வயது) என்பவரே காயமடைந்தவராவார்.

'யாழ்தேவி' ரயில் நிலையத்தில் தரித்து நிற்பதற்கு முன்னர் இவர் ஏற முற்பட்ட போதே இந்த விபத்து ஏற்பட்டது.

## வெற்றி தோல்வி இல்லை

(கொழும்பு)

ஹைதராபாத்தில் இலங்கைக் கிரிக்கெட் அணிக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கும் இடையே நடைபெற்றமுதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

பாகிஸ்தான்குழு முதலாவது ஆட்டத்தில் 8 விக்கட்டுக்கள் இழப்புக்கு 555 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கைக் குழு தன் முதலாவது ஆட்டத்தில் 475 ஓட்டங்களைப் பெற்றது.

அரவிந்த டி சில்வா இந்தப் போட்டியில் சிறந்த வீரராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## நாகராஜன் நினைவாக குழந்தைப் பாடல் போட்டி

### யாழ். இலக்கிய வட்டம் நடத்தும்

(யாழ்ப்பாணம்)

யாழ் இலக்கிய வட்டத்தின் செயற்குழுக் கூட்டம் தலைவர் 'சகியாரதி' தலைமையில் நடைபெற்றபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வழமைபோல இவ்வாண்டும் இரசிகமணி கனக. செந்திநாதன் குறுநாவல் போட்டி நடாத்துவது.

மதுரகவி இ. நாகராஜன் ஞாபகார்த்தமாக குழந்தைப் பாடல் போட்டியினை நடத்துவது

யாழ். இலக்கிய வட்ட ஆண்டுப் பொதுக் கூட்டத்தையும் இலங்கை இலக்கியப் பேரவை நடாத்திய பரிசு நூல்களுக்கான பரிசளிப்பு விழாவினையும் எதிர்வரும் மார்கழி மாத இறுதியில் நடத்துவது.

இவ்விழாவைபொட்டி மலர் வெளியிடுவதெனவும், திருவாளர்கள் இராஜ அரியரத்தினம், க. தி. குலரத்தினம், பண்டிதர் செ. கதிரேசர்பிள்ளை ஆகியோரைக் கௌரவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## ஆட்சேபம்

(புதுடில்லி)

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழீழ ஆதரவாளர்கள் டில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்தின்முன்பாக நேற்று ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டப்போராட்டம் அரைமணி நேரத்துக்கும் மேல் நீடித்ததாகவும், போராட்டம் நடத்தியதமிழீழ ஆதரவாளர்கள் அமைதியாகக் கலைந்து சென்றுள்ளதாகவும் டில்லி பொலிஸார் அறிவித்துள்ளனர் (அ)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்லூரிகளிடையே நடைபெற்று வரும் சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், இன்று யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதுகின்றன.

இப்போட்டி இன்று சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் விதாயனத்தாரால் யாழ்ப்பாணம், இலவ்சோலிஸ் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 10036 / 81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu. Tele-Phone: 22389 — 24126.



## மரண அறிவித்தல்

### பொ. கனகரெத்தினம்

(செல்வராஜா)

புவனேஸ்வரி வீதி, கொக்குவில் கிழக்கு வாசியான திரு. பொன்னையா கனகரெத்தினம் (செல்வராஜா) 19-10-85 சனிக்கிழமை சிவபதமடைந்தார். இவர் மதுரநாயகியின் அன்புக் கணவரும், திரு. விஜயகுமார் (பொறியியலாளர், லண்டன்), திரு. ஜீவகுமார் (லண்டன்), திருமதி ஜெ. ஆனந்தி, திருமதி மாலதி, செல்வி பாமதி, செல்வி கலாமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ஐ. ஜெகதீசன், (C. O மன்னாரம்), திரு. உ. புவிலிங்கம் (ரயில்வே காட்) ஆகியோரின் மாமனாரும், செல்வன் ஜனனின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை 23-10-85 புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

['வளர்மதி', கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்]

(1371)

## மரண அறிவித்தல்

### தருமலிங்கம் மோகனம்பிகை

காரைநகரைச் சேர்ந்த தருமலிங்கம் மோகனம்பிகை காலமாகிவிட்டார். இவர் தருமலிங்கத்தின் (நைஜீரியா) அன்பு மனைவியும், காலஞ்சென்ற S. V. பொன்னம்பலம் தம்பதிகளின் மகளும் (சமலா பீடி), காலஞ்சென்ற சோமசுந்தரம் தம்பதிகளின் மருமகளும், நந்தினி, நந்தகுமார் (லண்டன்), சிவகுமார், பாலகுமார், சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி, சிவரத்தினம் (Managing Director Sebamas Export Ltd). செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியம் இராசம்மாவின் அன்பு மைத்துனியும் ஆவர். அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று (22-10-85 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு சாம்பலோடை மயானத்தில் நடைபெறும். (1354)

## மரண அறிவித்தல்

### இராமநாதன் - சிறீஸ்கந்தராசா

(சின்னராசு) இணுவில்

இவர் இளைப்பாறிய ஆசிரியர் ந. இராமநாதன், காலஞ்சென்ற நாகபூரணம் ஆகியோரின் அருமைப் புதல்வரும், விக்கினேஸ்வரனின் அன்புத் தம்பியும், மாலா, மதி முருகானந்தன், குகானந்தன், குணானந்தன் ஆகியோரின் சகோதரரும், சுப்பையா, நடராசா விமலாதேவி, கண்மணி ஆகியோரின் பெருமகனும், இரத்தினசபாபதி வாதூலத்தை (உ. த. அதிபர் கௌரி அம்மாவின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் தகனக் கிரியை இன்று (22-10-85) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் பூவோடை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நன்னித்தம்பி இராமநாதன்,
இணுவில் மேற்கு,
இணுவில். (1373)

## மரண அறிவித்தல்

### சுவாமிநாதர் ஆனந்தக்குமாரசாமி

[ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர்]

இளவாலை வடக்கு ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர் சுவாமிநாதர் ஆனந்தக்குமாரசாமி அவர்கள் 21-10-85-இல் இறைவனடி சேர்ந்தார். இவர் கெங்காதேவியின் அன்புக் கணவரும், சிவானந்தன் (சிவாஜி)யின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மயிலிட்டி சுவாமிநாதர் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், இளவாலை வடக்கு சின்னத்தம்பு தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரி சிவராஜா, இராசேஸ்வரி மூத்தியார், புவனேஸ்வரி சண்முகலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி சச்சிதானந்தன், ஸ்ரீபாஸ்கரன் - B A., கலாநிதி சந்திரராசா (யாழ். பல்கலைக்கழகம்), Dr மகேந்திரன் கொழும்பு), பாலேந்திரா C E. Highways, Mannar) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கணேசலிங்கம் R M. P. பண்டத்தரிப்பு), குமாரலிங்கம், சரோஜினிதேவி திருபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகக் கீரிமலை மயானத்திற்கு இன்று செவ்வாய், மாலை 4-00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

(1377)